செ.கு.எண்:273 நாள்: 03-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 3.8.2012

ராமநாதபுரம் மாவட்டம், பேரையூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. உதயக்குமார் அவர்கள் 5.5.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. சி.பெருமாள் அவர்கள் 8.5.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் நெய்க்காரபட்டி சாலையில் சென்று கொண்டிருந்த போது சாலை விபத்தில் காலமானார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஆர். நடராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் 15.5.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பெருமாள், தலைமைக் காவலர் திரு. உதயக்குமார் மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. நடராஜன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சாலை விபத்தில் காலமான திரு. சி.பெருமாள், மாரடைப்பால் காலமான திரு. என். உதயக்குமார், உடல்நலக் குறைவால் காலமான திரு. ஆர். நடராஜன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9